# தியாகி ஐ. மாயண்டிபாரதி அவர்கள்



தியாகி ஐ.மாயாண்டிபாரதி அவர்களை அவர் இறப்பதற்கு 25ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நல்ல பழக்கம்.

மதுரை - வடக்குமாசி வீதியிலுள்ள அவரது இல்லத்திலும் மண்டையம் ஆசாரி வீதியிலுள்ள அலுவலகத்திலும் பலமுறை சந்தித்து நீண்ட நேரம் உரையாடியுள்ளோம். ‘விடுதலை வேள்வியில் தமிழகம் ‘ நூல் தயாரிப்பின் போது அவரை குறைந்தபட்சம் பத்து முறையாவது அதற்கென சந்தித்திருப்போம். வேறு வேலையாக மதுரை செல்கிற போதும், மதுரை வழியாக வேறு ஊர்களுக்குச் செல்கிற போதும் பெரும்பாலும் ஐ.மாயாண்டிபாரதி யைச் சந்தித்துப் பேசியுள்ளோம்.

அவரின் விடுதலை போராட்ட வரலாறு, இதழியல் பணிகளில் கிடைத்த அனுபவங்கள், ஜீவா உள்ளிட்ட பிற தலைவர்களுடன் அவருக்கிருந்த நெருக்கமான நேரடித் தொடர்பு, பட்டுக்கோட்டையாருடனனான தோழமை, காந்தியடிகள் உள்ளிட்ட

தேசத் தலைவர்களைப் பார்த்த பரவச நிகழ்வுகள், பாவலர் வரதராசன் நினைவுகள், அவரின் எழுத்துலக அனுபவங்கள் என்று இது போன்ற தலைப்புகளைச் சுற்றிச் சுற்றியே எமது கேள்விகளும் இவருடான உரையாடலும் அமைந்திருக்கும்.

நேதாஜி விழா, பகத்சிங் விழா, பாரதி விழா என்று பல விழாக்களுக்கு ஐ.மா.பா வை அழைத்துள்ளோம். ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவை ஐ.மா.பா திறந்து வைத்தார். மூன்று சக்கர சைக்களில் வைத்து இவரை திறக்கும் இடத்திற்கும் மேடைக்கும் அழைத்து வந்ததும், அந்த தள்ளாத வயதில் அவர் உணர்வுபூர்வமாக உரை நிகழ்த்தியதும் மறக்க முடியாத நிகழ்வுகளாகும்.

அவருக்குக் குழந்தை இல்லை. அவரது மனைவி பல முறை வீட்டுக்குச் சென்ற பழக்கத்தில் 'ஈரோட்டுத் தம்பி' என்று அன்போடு அழைத்து மகிழ்வோடு உபசரிப்பார்.